

கோவை மாநகர துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் அவர்களின் சகோதரர் சுலைமான், சமீபத்தில் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை கோட்டைமேடு பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று மறைந்த சுலைமான் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

எம்-சாண்டு, பி-சாண்டு - ஜல்லிக்கு

# ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000 குறைப்பு!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

சென்னை, ஏப்.29 -

எம்சாண்டு பி-சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்திடவும், சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ நிர்ணயித்திடவும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டது.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (27.04.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், கல் குவாரி, கிரஷர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் 25.04.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

இதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம் சாண்டு பி சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்யப்படும் என சங்கத்தினரால் ஏற்கப்பட்டது.

சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும்.

இக்கூட்டத்தில், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நகரப் பேருந்துகளிலும் மகளிருக்கு விடியல் பயணம்!

# எந்த மாநிலத்திலும் இல்லாதது - நமது முதல்வர் கொண்டு வந்த திட்டம்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதம்!

**சென்னை, ஏப். 29 -**

**சட்டப்பேரவையில் விளவங்கோடு தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் முனைவர் தாரகை கத்பட எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-**

**முனைவர் தாரகை கத்பட:** விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, அஞ்சாலிகடவு வழியாக தடம் எண் PHS8 பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, அஞ்சாலிகடவு வழியாக தடம் எண் PHS8 என்ற பேருந்தை மீண்டும் இயக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**முனைவர் தாரகை கத்பட:** விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சியில் அஞ்சாலிகடவு எனும் ஊருக்கு bus வசதி குறைவாக உள்ளது. இங்கு இயக்கப்படும் பேருந்தை பள்ளி, கல்லூரி மற்றும் வேலைக்கு சென்று வருபவர்களின் வசதிக்காக காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் இயக்குவதோடு, PHS8 என்ற பேருந்து மார்த்தாண்டத்திலிருந்து திருத்துவபுரம், மருதங்கோடுசெம்மங்காலை வழி மேல்புறம், உத்திரங்கோடு, முதப்பன்கோடு, பிலாவிளை வரை சென்று கொண்டிருந்தது. இந்தப் பேருந்து நீண்ட வருடங்களாகவே நிறுத்தப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் ஏற்கெனவே இருந்ததைப்போலவே பேருந்தை இயக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** விளவங்கோடு தொகுதி, விளாத்துறை ஊராட்சி, அஞ்சாலிகடவு வழியாகத் தடம் எண் PHS8 என்ற பேருந்து மார்த்தாண்டம், அஞ்சாலிகடவு தடத்தில் இயக்கப்படவில்லை. PHS 8 என்ற பேருந்து மார்த்தாண்டம் 5 வழித்தடத்தில் இயக்கப்பட்டு, பயணிகள் பயன்பாடு இல்லாததால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுத்தப்பட்டதாக தகவல்கள் உள்ளன. இத்தடத்திற்குப் பதிலாக 85/B என்ற பேருந்து மார்த்தாண்டம் 5 வழித்தடத்தில் தினந்தோறும் 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம், கோரிக்கையின்படி, தடம் எண் 87/D என்ற பேருந்து மார்த்தாண்டம், அஞ்சாலி கடவு தடத்தில் வெட்டுவெந்தி, காப்புக்காடு, ஆலமூடு வழியாக காலை மற்றும் மாலை ஆகிய நேரங்களில் தற்போது 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் இயக்குகிற பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடும் குறைவாகவே உள்ளது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவு செய்யும்பொருட்டு, இந்தப் பேருந்து வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன.

**முனைவர் தாரகை கத்பட:** முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள விடியல் பயணத் திட்டம் பெண்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு மகளிர் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவுப் பேருந்துகளிலும் இலவசமாக மகளிர் பயணம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று மகளிர் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இந்தியாவிலேயே Evergreen மாவட்டமான குமரி மாவட்டத்தில், மலையும், காடும், இயற்கையும் நிரம்பி வழியும் விளவங்கோடு தொகுதியில் சுற்றுலாவையும், ஆயுர்வேதத்தையும் மேம்படுத்தும் வகையில், மார்த்தாண்டத்திலிருந்து பயணம் வழியாக சிதறால் மலைக் கோயில், அருமனை, திருவரம்பு, திற்பரப்பு நீர்வீழ்ச்சி, நெட்டாறு நீர்பிடிப்புப் பகுதி ஆகியவற்றோடு இணைத்து, பேருந்தை இயக்க வேண்டும்.

மேலும், சுற்றுலா பயணிகள் வசதிக்காக புதிய பேருந்தை இயக்குவதுடன், 85A மார்தாண்டம், கழுவன் திட்டை, பரக்குன்று வழியாக பனச்சமூடு செல்கின்ற பேருந்தை இரவு 7 மணிக்குமேல் இயக்கப்படுவது இல்லை. இதனால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள். இதை அரசு இயக்க முன்வருமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** ' உறுப்பினர் அவர்கள் ஒரே கேள்வியில் 4, 5 கேள்விகளை அடுக்கடுக்காக வைத்திருக்கிறார்கள். நகரப் பேருந்துகளில் மகளிருக்கு விடியல் பயணம் கொடுப்பது என்பது, எந்த மாநிலத்திலும் இல்லாதத் திட்டம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். அதை மற்ற பேருந்துகளுக்கு விரிவுப்படுத்தினால், இதற்கும் அதற்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடும். எதாவது ஒன்றில் கொடுத்தால் அதனுடைய அருமை தெரியும். எனவே, இப்போதைக்கு இதுவே போதுமானதாக இருக்கிறது. அதேபோல சுற்றுலா வழித்தடங்களை இணைக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே கொடைக்கானலில் இதேபோன்று சுற்றுலா வழித்தடங்களை இணைத்து ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. தற்போது முதலமைச்சர் அவர்கள் ஊட்டிக்கு சென்றபோது அங்கேயும் இது "hopon, hop off" tourism services அறிவித்து இருக்கிறார்கள். எனவே தங்களுடைய தொகுதியிலும், நீங்கள் கூறியிருக்கின்ற அந்த வழித்தடங்களை இணைத்து ஒரு பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பதிலளித்தார்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி. கண்ணாபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் சேவார்த்திகள் இளைப்பாறும் மண்டபத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். உடன் காங்கேயம் வட்டாட்சியர் மோகனன், செயல் அலுவலர் சு.இராமநாதன், வெள்ளக்கோயில் ஒன்றிய செயலாளர் எஸ்.சந்திரசேகரன் ஆகியோர் உள்ளனர்.

கெங்கவல்லி தொகுதி

# கோவிந்தம்பாளையத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில்—அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

**சென்னை, ஏப். 29 -**

**சட்டப்பேரவையில் கெங்கவல்லி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த பதிலும் வருமாறு:-**

**அ. நல்லதம்பி:** கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி:** சேலம் மாவட்டம், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் விரைவில் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.நல்லதம்பி:** சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கோவிந்தம்பாளையம் கிராமத்திற்கு நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்று கேட்டு, கேள்வி கேட்டிருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் அங்கு நேரடி கொள்முதல் நிலையம் அமைத்துத் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். அதற்கு நன்றி.

தமிழ்நாடு முழுவதும் தற்போது சோதனை அடிப்படையில், POS machineகளுடன் கணினி எடை தராசு



Bluetooth மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையால் பொது மக்கள் கைரேகை வைத்த பின்புதான், அவர்களுக்கான பொருட்களின் அளவை எடை தராசில் வைத்த பிறகு, bill போட்டு பணம் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உள்ளதால், ஒரு நாளைக்கு தோராயமாக 25 bill மட்டுமே போடப்படுவதால், காலதாமதம் ஏற்பட்டு, பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உள்ளது.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் கைரேகை வைக்கின்ற காரணத்தினால் பொருட்கள் வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று இங்கே சொன்னார்கள். ஒன்றிய அரசு இந்தியாவில் இருக்கிற அனைத்து நியாய விலைக் கடைகளிலும் Bio metric கைரேகை கண்டிப்பாக பதிவு செய்து, பொருளை வழங்க வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறது. உங்களுடைய ஆட்சிக்காலத்தில் 60% ஆக இருந்தது.

முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஒன்றிய அரசின் வலியுறுத்தலின் காரணமாக, இப்போது 99.60% கைரேகை வைத்துத்தான் பொருள் வாங்கப்படுகிறது. நீங்கள் சொன்னது போன்று கைரேகை பதியவில்லையென்றாலும், கண் கருவிழி மூலமாக iris என்ற முறையிலே பொருளை வாங்குவதற்கு இந்த அரசு அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது. உண்மையிலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் இதுப்பற்றி எங்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நானும்கூட சமீபத்தில், கீழ்பாக்கம் பகுதியிலே இருக்கின்ற நியாயவிலைக் கடைக்கு சென்று அதை பார்த்தோம். அதனால் சில நேரங்களிலே காலதாமதம் ஏற்படுகிறது.

நகரப்பகுதிகளிலே கட்டுநர் இருக்கிறார்கள். அதனால் பொருட்ளுக்கான அந்த billஐ salesman உடனே போட்டு, கட்டுநர் எடை போட்டு கொடுப்பதினால் பொதுமக்கள் எளிதாக வாங்கிச் சொல்கிறார்கள். கிராமப்பகுதிகளில் அந்த கட்டுநர் இல்லாத காரணத்தினால், பொருளை வாங்குவதற்கு பொதுமக்களுக்கு billயைப் போட்டு, கட்டுநர் இல்லாத காரணத்தால் அவரே சென்று எடைப் போடுவதனால் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கண்டிப்பாக வருகின்ற காலத்திலே, பொதுமக்கள் எந்த சிரமமுமின்றி பொருளை வாங்கிச் சொல்வதற்கு, கட்டுநர்களை கிராமப் பகுதிகளில் இருக்கின்ற நியாய விலைக் கடைகளிலே, சுமார் 500 குடும்ப அட்டைகள், 800 குடும்ப அட்டைகளுக்கு மேலிருக்கின்ற கடைகளுக்கு கட்டுநர் நியமிப்பதற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நானும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து சென்று, அந்தக் கட்டுநர் பதவியை நிரப்புவதற்கு வருகின்ற காலத்திலே நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பதிலளித்தார்.

பெரம்பலூருக்கான

# பசுமை ரயில் பாதை, பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்!

## திருச்சி ஆலோசனைக் கூட்டத்தில் அருண்நேரு எம்.பி. பேச்சு!

திருச்சி, ஏப். 29 -

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ரயில்வே பல்துறை மண்டல பயிற்சி மையத்தில் , திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற வருடாந்திர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது .

கூட்டத்தில் பங்கேற்ற ரயில்வே பொது மேலாளர் ஆர்.எம். சிங் , கோட்ட ரயில்வே பொது மேலாளர் எம்.எஸ். அன்பழகன் மற்றும் துறை அதிகாரிகளிடம் பயணிகளின் தேவைகள் பற்றியும், தொகுதியில் தேவையான ரயில்வே மேம்பாட்டு பணிகள் பற்றியும் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, பங்கேற்று கோரிக்கைகளை எழுப்பினார்.

அப்போது அருண் நேரு எம்.பி. பேசியதாவது:

தமிழ்நாட்டின் பெரம்பலூருக்கு முன்மொழி யப்பட்ட கிரீன்ஃபீல்ட் ரயில் பாதை, இந்தப் பகுதிக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளைத் திறக்கும் திறன் கொண்ட ஒரு திட்டமாகும்.

விவசாய உற்பத்தியில் வளமான மாவட்டமான



பெரம்பலூர், மக்காச்சோளம், பருத்தி மற்றும் தினை போன்ற முக்கிய பயிர்களை வளர்க்கிறது, இவை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கணிசமான சந்தை தேவையைக் கொண்டுள்ளன. போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துவது விநியோகச் சங்கிலிகளை ஒழுங்குபடுத்தும், போக்குவரத்து செலவுகளைக் குறைக்கும், மேலும் விளைபொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்யும், இதன் மூலம் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் மற்றும் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும்.

கூடுதலாக, பெரம்பலூர் ஸ்டார்ச், உணவுப் பொருட்கள் மற்றும் காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இரண்டு முக்கிய தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது, இவை உலக சந்தைகளில் நிலையான தேவையைக் கொண்டுள்ளன.

தற்போது, இந்த தொழிற்சாலைகள் தினமும் சுமார் 75 கொள்கலன்களை ஏற்றுமதி செய்கின்றன. மேலும் ஒரு பிரத்யேக ரயில் பாதையை நிறுவுவது இந்த செயல்பாடுகளின் செயல்திறன் மற்றும் செலவு செயல்திறனை மேம்படுத்தும், மேலும் அவற்றின் போட்டித்தன்மையை மேலும் வலுப்படுத்தும்.

மேலும், பெரம்பலூர் தானிய சேமிப்பு மற்றும் விநியோகத்திற்கான முக்கிய மையமாக செயல்படுகிறது, தானிய வேகன்கள் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் வருகின்றன. முன்மொழியப்பட்ட ரயில் பாதை, தளவாடங்களை மேம்படுத்தி, தானியங்களின் சீரான மற்றும் சரியான நேரத்தில் இயக்கத்தை உறுதிசெய்து, உணவுப் பாதுகாப்பை ஆதரிக்கும், பெரம்பலூருக்கான பசுமை ரயில் பாதை, பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும், கிராமப்புற இணைப்பை ஊக்குவிக்கும் மற்றும் தொழில்துறை வளர்ச்சியை வலுப்படுத்தும். இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டத்தின் முழு திறனையும் ஆராய சாத்தியக்கூறு ஆய்வுகள் தொடங்கப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகள் பொதுமக்களின் அவசரத் தேவைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றன, மேலும், அவை தீர்க்கப்பட்டவுடன், இந்த தொகுதிகளில் உள்ள ரயில் பயனர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்தும்.

உங்கள் அன்பான கவனத்தையும்,விரைவில் நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அருண்நேரு எம்.பி பேசினார்.

மேலும், லால்குடி மணச்சநல்லூர் முசிறி துறையூர் பெரம்பலூர் குளித்தலை உட்பட்ட பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் வாரியாக உள்ள ரயில்வே மேம்பாட்டு திட்டங்கள் குறித்தும் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் தொப்பூர் ஊராட்சியில் வார சந்தையை புதுப்பித்து தருமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி நேரில் சென்று ஆய்வு செய்து உடனடியாக நாடாளுமன்ற தொகுதி நிதியிலிருந்து புதுப்பித்து தருவதாக உறுதி அளித்தார். இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.மல்லமுத்து, ஏ.எஸ்.சண்முகம், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.ஈஸ்வர், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.கே.துரைசாமி, ஒன்றிய அவைத் தலைவர் பி.ஆர்.மணி, ஒன்றிய துணை செயலாளர்கள் கலாராணி கண்ணன், வெங்கடேசன், ஒன்றிய பொருளாளர் மோகன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



வேளாண் பொறியியல் துறையின் சார்பில் சேலம் மாவட்டத்தில் உள்ள 52 ஓடைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகளில் ரூ.15.68 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் பராமரிப்பு பணிகளை, சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் மல்லியக்கரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் சுற்றுலா துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். உடன் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் குமரன், அட்மா குழு தலைவர் டாக்டர் வே.செழியன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உள்ளனர்.